## அபிவெனுவென் அபி நிதியத்தின் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

#### அபிப்பிராயம்

நிதிக் கூற்றுக்களிலிருந்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அபிவெனுவென் அபி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்குஇணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2. நிதி மீளாய்வு

#### நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயற்பாடுகளிலிருந்து தோன்றிய நிதிசார் விளைவுகள் ரூபா 31,488,143 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 86,634,147 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 55,146,004 தொகையான வீழ்ச்சிக்கு நன்கொடை ரூபா 6,162,625 தொகையாலும் தொலைத்தொடர்வு கோபுர வருமானம் ரூபா 54,040,581 தொகையாலும் ரணஜயபுர வீடமைப்புச் செயற்திட்டத்தின் தவணைப் பணம் ரூபா 20,054,493 தொகையாலும் முதலீட்டு வட்டி ரூபா 18,179,427 தொகையாலும் கை வளையல்கள் நிகழ்ச்சித்திட்ட வருமானம் ரூபா 4,329 தொகையாலும் அதிகரித்தமையும் செயற்திட்டச் செலவுகள் ரூபா 153,567,735 தொகையாலும் வங்கி கட்டணம் ரூபா 1,747 தொகையாலும் பெறுமானத் தேய்வு ரூபா 17,977 தொகையாலும் அதிகரித்தமை காரணமாக இருந்தது.

### 3. செயற்பாட்டு மீளாய்வு

#### முகாமைத்துவ செயற்திறனின்மை

இபலோகம ரணஜயபுர வீடமைப்பு செயற்திட்டத்திலிருந்து வீடுகளைப் பெற்றுக்கொண்ட முப்படை அங்கத்தவரிடமிருந்து ஒரு வீட்டிற்காக ரூபா 800,000 தொகை ரூபா 4,000 படி 200 மாதாந்த தவணைகளில் அறவிடப்பட வேண்டிய போதிலும் 2012 திசெம்பர் மாதம் வரை 55 வீடுகளுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,640,000 தொகையான தவணைப் பணத்தை அறவிடுவதற்கு நிதியம் தவறியிருந்ததுடன் அத்தவணைப் பணத்தினை அறவிடவேண்டிய தவணைப் பணமாக கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து எதிர்காலத்திற்கு ஆகக்குறைந்தது. 03 ஆண்டுகளுக்கான கூட்டிணைந்த திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

கூட்டிணைந்த திட்டத்திற்கு இணங்க 2010 மற்றும் அதிலிருந்து எதிர்காலத்திற்கு வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதி மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அபிவெனுவென் அபி நிதியத்தினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியுடன் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரையும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2012 திசெம்பர் 31 வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது நிதியத்தின் செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கடன் தவணைப் பணத்தை அறவிடுதல்

(ஆ) பணத்தை முதலீடு செய்தல்

(இ) திட்டங்களைத் தயாரித்தல்